# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1986 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, மாநகர சபைகள், நகரசபைகள் (திருத்தச்) சட்டம்

*[1986, நவம்பர் 12 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1986 நவம்பர் மாதம் 14 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை: ரூபா 1.50* *தபாற் செலவு: ரூபா 1.15*

## 1986 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, மாநகர சபைகள், நகர சபைகள் (திருத்தச்) சட்டம்

[1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ 58/85
1793

### மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தையும், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தையும் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, மாநகர சபைகள், நகர சபைகள் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

252 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தேழாம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

((அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்துடன் டிசம்பர் முப்பத்தோராம் நாளன்று முடிவுறுதல் வேண்டும்" என்னும் சொற்களில் தொடங்கி அவ்வுட்பிரிவு முடியும் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"அத்துடன், அத்தகைய சபை உறுப்பினர், இறப்பினால், பதவியிலிருந்து விலகுவதால் அல்லது பதவியினின்று அகற்றப்படுவதால் முன்னமே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அத்தகைய பதவிக்காலம் தொடங்கிய தேதியிலிருந்து நாற்பத்தெட்டு மாதங்களைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்." ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) அமைச்சர், கசெட்டில் வெளியிடப்படும் கட்டளைமூலம்—மூலம்—

(அ) பதவிக்காலப்பகுதி முடிவுறும் தேதிக்குப் பதிலாக, அத்தகைய பதவிக்காலமானது அவ்வாண்டின் அல்லது அவ்வாண்டிற்கு நேர்முந்திய ஆண்டின் எந்த மாதத்தில் முடிவுறுகின்றதோ, அந்த மாதத்திற்கு முந்திய ஏதேனும் மாதத்தில் ஒரு நாளை நியமிப்பதன்மூலம் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிக்காலத்தைக் சுருக்கலாம் ; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் பதவிக்காலமானது முடிவுறும் தேதிக்குப்பதிலாகப் பதவிக்காலமானது அவ்வாண்டின் அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆண்டினை அடுத்துவரும் ஆண்டின் எந்த நாளன்று முடிவுறுகின்றதோ அந்த நாளுக்குப் பிந்திய

ஏதேனும் மாதத்தில் ஒரு நாளை, நியமிப்பதன்மூலம் அத் தகைய காலத்தை நீடிக்கலாம். அத்துடன், அதன்பின் னர், கடைசிக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அத் தகைய காலம் முடிவுறும் தேதிக்குப் பதிலாகப் பிந்திய தேதியொன்றை நியமிப்பதன்மூலம் காலத்துக்குக் காலம் அத்தகைய காலத்தை நீடிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய பதவிக்காலம் நீடிக்கப்படும் காலப்பகுதி அல்லது காலத்துக்குக்காலம் அத்தகைய பதவிக்காலம் நீடிக்கப்படும் காலப்பகுதி களின் கூட்டுமொத்தம் பன்னிரண்டு மாதங்களை விஞ் சுதல் ஆகாது." .

*முதன்மைச் சட்டவாக்கத் தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்துமூன்றும் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச்சட்டவாக்கத் தின் 40 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (1983 ஆம் ஆண் டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) அவ்வுட்பிரிவின் (பப) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (பபப) அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன்—

(i) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தினதும் நகரசபைகள் கட்டளைச்சட்டத்தினதும் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் மாநகரசபை யால் அல்லது நகரசபையால் தாபித்துப் பேணப்படக்கூடி யனவான, விடயத்துக்கேற்றாற்போல பகிரங்க சேவை களுக்கு அல்லது பகிரங்கப் பயன்பாட்டுச் சேவைகளுக் குத் தேவைப்படக்கூடியவையான அத்தகைய எந்திர சாதனங்களை, உபகரணங்களை, பொருள்களை, மூலப் பொருள்களையும், பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்கும் தயாரிப்பதற்குமான வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுதல் ; அத்துடன்

(ii) அத்தகைய எந்திரசாதனங்களை, உபகரணங்களை, பொருள் களை, மூலப்பொருள்களை அல்லது பண்டங்களை, வேறு ஏதேனும் மாநகர சபைக்கு அல்லது நகர சபைக்கு அல் லது பொதுமக்களுக்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்த கைய விலைகளில் விற்றல்.".

*முதன்மைச் சட்டவாக்கத் தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச்சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்நூறு ரூபாவை விஞ் சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத் தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச்சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவானது, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில், இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களைஇடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவானது, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவானது, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;";

(இ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும்,

தொடர்ந்து செய்யும் தவறொன்றின் விடயத்தில் இருநூற்றைம் பது ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஈ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக " குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன் மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின் வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பிடிக்கப்பட்ட விலங்கு எதுவும், எந்த ஆளினால் அந்த விலங்கு பிடிக்கப்படக் கூடுமோ அந்த ஆளின் பயன்பாட்டுக்கெனவும், அந்த விலங்கானது தொழுவத் தில் வைத்திருக்கப்படக்கூடிய ஒவ்வொரு நாளுக்காகவும் சபை யானது உள்ளூர் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தீர்மானத் தின் மூலம் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கக் கூடியவாறான அத்தகைய தொகையில் கொடுப்பனவு செய்திருப்பதன்மீதன்றி, அதன் சொந்தக்காரரிடம் ஒப்படைத்தலாகாது." ; அத்துடன்

(ஆ) அதன் (3) ஆம் உட்பிரிவில் " அத்துடன் எந்த ஆளினால் விலங்கா னது பிடிக்கப்பட்டதோ" என்பது தொடங்கி, "செலுத்தியதன் பின்னர்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலா கப் பின்வருவதை இடுவதன் மூலமும் :—

"அத்துடன் எந்த ஆளினால் அந்த விலங்கானது பிடிக்கப்பட் டதோ அந்த ஆளுக்கும் அந்த விலங்கானது தொழுவத்தில் வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு நாளுக்குமான கட்டுக் காவலுக் கும் பராமரிப்புக்குமென சபையானது உள்ளூர் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தீர்மானத்தின் மூலம் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைச் செலுத்தியதன் பின்னர்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவானது "குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன் மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவைத் திருத்துதல்

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவானது "குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றுக்கு " என்னும் சொற்களுக்குப் பதிலாகப், " குற்றத்தீர்ப்பளிக்கப்பட் டதன் மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என் னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவானது "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவானது "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் பத்து ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப் பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்று தொடர்பில் நூறு ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப் பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில், இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவானது, அப்பிரிவின், (11) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும் "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு என்னுஞ் சொற்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும் "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன் மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றுக்கு" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ் சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னுஞ் சொற்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 116 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே,

முதன்மைச் சட்டவாக்கத்தின் 116 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும் "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவைத் திருத்துதல்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 121 ஆம் பிரிவைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 121 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தபபடுகின்றது.

33. முதன்மைச்சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவானது, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவைத் திருத்துதல்.

34. முதன்மைச்சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத் தைந்து ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற் களுக்குப் பதிலாக "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருநூற்றைம் பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவைத் திருத்துதல்.

35. முதன்மைச்சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவானது, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்து ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பண மொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவைத் திருத்துதல்.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ் சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துதல்.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவானது, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கும், தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் பத்து ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவைத் திருத்துதல்.

38. (ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டதான) முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 அ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கொழும்பு மாநகரசபையின் நிருவாக எல்லைகளுக்குள் ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் மாநகர சபை யின் நிருவாக எல்லைகளுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 136ஆ என்னும் புதிய பிரிவைத் உட்புகுத்தல்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது உட்புகுத்தப்படுவதுடன், அது அச் சட்டவாக்கத்தின் 136ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஆளுக்கு அல்லது ஆதனத்துக்கு ஆபத்தை விளைவிக்கும் மரங்கள், கிளைகள், துண்டங்கள் அல்லது பழங்கள் தொடர்பாக மாநகர முதல்வருக்குள்ள தத்துவம்.

136ஆ. (1) ஏதேனும் மாநகரசபை இடப்பரப்புக்குள்ளாக இருக்கின்ற ஏதேனும், மரம், ஏதேனும் கிளை, துண்டம், பழம் அல்லது மரத்தின் வேறேதேனும் பாகம், ஏதேனும் கட்டிடத்திற்கு சேதம் விளைவிக்கின்ற விடத்து, அல்லது சேதம் விளைவிக்கக்கூடியவிடத்து அல்லது ஏதேனும் கட்டிடத்தில் இருப்பவர்களுக்கு அல்லது பகிரங்கப் பாதை வழியே செல்பவர்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்ற விடத்து மாநகர முதல்வர், அத்தகைய மரம் நிற்கின்ற காணிச் சொந்தக்காரரிடம் அல்லது இருப்பாட்சியாளரிடம் சேர்ப்பிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய காலத்துக்குள்ளாக அத்தகைய மரத்தை அல்லது கிளையை அல்லது துண்டத்தை அல்லது அத்தகைய மரத்தின் முகப்பை அல்லது வேறு பாகத்தை ஒன்று சேர்த்துப் கட்டிப் பாதுகாக்குமாறு அல்லது வெட்டி வீழ்த்தி அகற்றுமாறு தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலைப் பெற்றுக்கொண்டவரான ஒவ்வோராளும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய காலத்துக்குள்ளாக அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக அத்தகைய ஆள் மறுக்கும் அல்லது அசட்டை செய்யும் பட்சத்தில், அத்தகைய மாநகர முதல்வர் அல்லது அத்தகைய மாநகர முதல்வரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது வேலையாள் அத்தகைய அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட காணிக்குள் நுழைந்து அத்தகைய அறிவித்தலினால் செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்ட விடயத்தைச் செய்யலாம் என்பதுடன் அதன்மூலம் உறப்படும் செலவுகள் சபைக்குப் போமதியான கடன் ஒன்று என்றாற் போல அத்தகைய ஆளிடமிருந்து அறிவிடப்படலாம். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவைத் திருத்துதல்.

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

41. முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவானது, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துதல்.

42. முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவைத் திருத்துதல்.

43. முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவானது, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவைத் திருத்துதல்.

44. முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவானது, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துதல்.

45. முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவானது, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துதல்.

46. முதன்மைச் சட்டவாக்கத்தின் 180 ஆம் பிரிவானது, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" எனனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 180 ஆம் பிரிவைத் திருத்துதல்.

47. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டின் 61 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 188 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 188 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில் "கூட்டுமொத்தத்தில் ஆயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டுமொத்தத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ங) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஙங) உறுப்பினர்களின் வதிவிடத்துக்கான அலுவலக தொலை பேசி வசதிகளை நிறுவுவதிலும் அவற்றைப் பராமரிப்பதி லும் சபையால் உறப்படும் எல்லாச் செலவுகளும் ;".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 196 ஆம் பிரிவைத் திருத்துதல்.

48. முதன்மைச் சட்டவாக்கத்தின் 196 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற் களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 221 ஆம் பிரிவைத் திருத்துதல்.

49. முதன்மைச் சட்டவாக்கத்தின் 221 ஆம் பிரிவானது, "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றுக்கும், ஐம்பது ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு, ஐந்நூறு ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடு வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 227 ஆம் பிரிவைத் திருத்துதல்.

50. முதன்மைச் சட்டவாக்கத்தின் 227 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத செலவினம்" என் னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினையாயிரம் ரூபாவுக்கு மேற்படாத செலவினம்" என்னும் சொற்களை இடுவதன்மூல மும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "ஆயிரத்து ஐந்நூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினையாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 228 ஆம் பிரிவைத் திருத்துதல்.

51. முதன்மைச் சட்டவாக்கத்தின் 228 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்பட்ட செலவினம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினையாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவினம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "ஆயிரத்து ஐந்நூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினையாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 230 ஆம் பிரிவைத் திருத்துதல்.

52. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 230 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துள்ள உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின் றது.

**53.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 234 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத் தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 234 ஆம் பிரிவைத் திருத்துதல்

**54.** (1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத் தப்பட்டதான) முதன்மைச் சட்டவாக்கத்தின் 247ஆ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "சபையானது அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகவும், "அத்தகைய சபை அமைந்துள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாகவும் முறையே, "ஆணையாளர் அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களையும், "சபை அமைந்துள்ள" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 247ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**55.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) முதன்மைச் சட்டவாக் கத்தின் 247இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "சபை அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகவும், "அத்தகைய சபை அமைந்துள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக வும், "ஆணையாளர் அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களை யும், "சபை அமைந்துள்ள" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத் தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 247இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**56.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 20 ஆம் இலக்கச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) முதன்மைச் சட்டவாக்கத் தின் 247உ என்னும் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "சபை அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக. "ஆணையாளர் அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடு வதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 247உ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**57.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 251 ஆம் பிரிவு "குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற் களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 251 ஆம் பிரிவைத் திருத்துதல்

**58.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்ட வாக்கத்தின் 255 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின் றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 255 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "ஐந்து சதத்தை விஞ் சாத கட்டணமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுபத்தைந்து ரூபாவை விஞ்சாத கட்டணமொன்று" என் னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "எழுபத்தைந்து சதத்தை விஞ்சாத கட்டணமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுபத்தைந்து ரூபாவை விஞ்சாத கட்டணமொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "இருபத்தைந்து சதத்தை விஞ்சாத கட்டணமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு ரூபாவை விஞ்சாத கட்டணமொன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 256 ஆம் பிரிவைத் திருத்துதல்.

59. முதன்மைச் சட்டவாக்கத்தின் 256 ஆம் பிரிவு அப்பிரிவில், "ஆயிரம் ரூபா" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 266அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

60. முதன்மைச் சட்டவாக்கத்தின் 266 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 266அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"சபைக்கு வருமதியான தொகையை விட்டுவிடுதல்.

266அ. விட்டுவிடப்படவேண்டிய தொகையானது, மிகவும் அற்பமானதென அல்லது அறவிடப்பட முடியாததென அல்லது அத்தொகையைச் செலுத்த வேண்டியவரான ஆளினது வறுமை காரணமாக அது பதிவழிக்கப்படவேண்டுமெனச் சபைக்குத் தோன்றினால், எவரேனும் ஆளிடமிருந்து சபைக்கு வருமதியான (எத்தொகையின் விட்டுவிடுதலுக்காக 252 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அத்தொகையாகவிராத) ஏதேனும் பணத்தொகை முழுவதையும் அல்லது ஏதேனும் பாகத்தை, சபையானது, தீர்மானம்மூலம், விட்டுவிடலாம். விட்டுவிட வேண்டிய தொகையொன்று ஆயிரம் ரூபாவை விஞ்சுகின்ற விடயம் தொடர்பிலான அத்தகைய ஒவ்வொரு தீர்மானமும், அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அமைந்ததாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 297 ஆம் பிரிவைத் திருத்துதல்.

61. முதன்மைச் சட்டவாக்கத்தின் 297 ஆம் பிரிவானது "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 299 ஆம் பிரிவைத் திருத்துதல்.

62. முதன்மைச் சட்டவாக்கத்தின் 299 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

63. முதன்மைச் சட்டவாக்கத்தின் 308 ஆம் பிரிவானது, "புரியப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "புரியப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. **முதன்மைச் சட்டவாக்கத்தின் 308 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

64. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையானது, அதன் 2 ஆம் பந்தியில், (உ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.**

"(ஊ) வெடிப்பொருள்கள் கட்டளைச்சட்டம், 1902.".

## பாகம் II

65. ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தேழாம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :— **255 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "டிசம்பர் 31 ஆந் தேதியன்று முடிவுறுதல் வேண்டும்" என்னும் சொற்களில் தொடங்கி, அப்பிரிவு முடியும் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"அத்துடன், அத்தகைய சபை உறுப்பினர் இறப்பினால், பதவியிலிருந்து விலகுவதால் அல்லது பதவியினின்று அகற்றப்படுவதால் முன்னமே தமது பதவியை வறிதாக்கினாலொழிய அத்தகைய பதவிக்காலம் தொடங்கிய தேதியிலிருந்து நாற்பத்தெட்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்."; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(2) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம்—

(அ) பதவிக்காலம் முடிவுறும் தேதிக்குப் பதிலாக, அத்தகைய பதவிக்காலமானது அவ்வாண்டின் அல்லது அவ்வாண்டிற்கு நேர்முந்திய ஆண்டின் எந்த மாதத்தில் முடிவுறுகின்றதோ அந்த மாதத்திற்கு முந்திய ஏதேனும் மாதத்தில் ஒரு நாளை நியமிப்பதன்மூலம் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிக் காலத்தை சுருக்கலாம்; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் பதவிக்காலமானது முடிவுறும் தேதிக்குப் பதிலாக, பதவிக் காலமானது அவ்வாண்டில் அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆண்டினை அடுத்துவரும் ஏதேனும் ஆண்டில் எந்த நாளன்று முடிவுறுகின்றதோ அந்த நாளுக்குப் பிந்திய ஏதேனும் மாதத்தில் ஒரு நாளை நியமிப்பதன்

மூலம் அத்தகைய காலத்தை நீடிக்கலாம்; அத்துடன், அதன் பின்னர், கடைசிக் கட்டளையில் குறித்துரைக்கப் பட்ட அத்தகைய காலம் முடிவுறும் தேதிக்குப் பதிலாக, அதில் குறித்துரைக்கப்பட்ட ஆண்டுக்குப் பிந்திய ஏதே னும் ஆண்டின் ஏதேனும் மாதத்தில் வரும் ஒரு நாளை, நியமிப்பதன் மூலம் காலத்துக்குக்காலம் அத்தகைய காலத்தை நீடிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய பதவிக்காலம் நீடிக்கப்படும் காலப்பகுதி அல்லது காலத்துக்குக்காலம் அத்தகைய பதவிக்காலம் நீடிக்கப்படும் காலப்பகுதி களின் கூட்டு மொத்தம் பன்னிரண்டு மாதங்களை விஞ்சு தல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

66. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திமூன்றும் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத் தின் 36 ஆம் பிரிவு (1983 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) அப்பிரிவின் (ii) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:—

"(iii) அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன்—

(i) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தினதும் நகரசபைகள் கட்டளைச்சட்டத்தினதும்கீழ் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் மாநகர சபையால் அல்லது நகரசபையால் தாபித்துப் பேணப்படக்கூடியன வான, விடயத்துக்கேற்றாற்போல பகிரங்க சேவைகளுக்கு அல்லது பகிரங்கப் பயன்பாட்டுச் சேவைகளுக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எந்திர சாத னங்களை, உபகரணங்களை, பொருள்களை, மூலப்பொருள் களையும், பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்கும் தயா ரிப்பதற்குமான வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுதல்; அத்துடன்

(ii) அத்தகைய எந்திர சாதனங்களை, உபகரணங்களை, பொருள் களை, மூலப்பொருள்களை அல்லது பண்டங்களை வேறு ஏதேனும் நகர சபைக்கு அல்லது மாநகரசபைக்கு அல் லது பொதுமக்களுக்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்த கைய விலைகளில் விற்றல்."

முதன்மைச் சட்டவாக்கத் தின் 159 ஆம் பிரிவைத் திருத்துதல்.

67. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவானது, அதன் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத் தால் மேலும் திருத்தப்படுகின்றது:—

"(ஊஊ) உறுப்பினர்களின் வதிவிடத்துக்கான அலுவகை தொலை பேசி வசதிகளை நிறுவுவதிலும் அவற்றைப் பராமரிப்பதி லும் சபையால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும்;"

**68.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவானது அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**69.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 165அ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "சபை அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகவும், "அத்தகைய சபை அமைந்துள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாகவும் முறையே "செயலாளர் அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களையும், "சபை அமைந்துள்ள" என்னும் சொற்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 165அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**70.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் (1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட), 165ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "சபை அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகவும், "அத்தகைய சபை அமைந்துள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாகவும் முறையே "செயலாளர் அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களையும், "சபை அமைந்துள்ள" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 165ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**71.** முதன்மைச் சட்டவாக்கத்தின், (1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 165ஈ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "சபை அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செயலாளர் அறிக்கை செய்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 165ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.